OS.No. 1/2025

Date : 02.03.2026

Witness Name & Rank – பாலசுப்பிரமணியம் - DW2

**சாட்சி அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 2க்கு பிறகு பத்தி 10 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் வழக்கறிஞர்கள் அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு நான் அதன் பிறகு கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு முன்பு எந்த நீதிமன்றத்தில் நடந்தது அதில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இடைக்கால மனுக்கள் குறித்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனவே நான் குறிப்பிட்டு பத்தி 2 மற்றும் பத்தி 10 ஆகியவை எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது உள்ளது வி.கள்ளிபாளையம் கிராமம் தாவா சொத்தில் இருந்து 5 முதல் 7 கி.மீ இருக்கும் என்றால் சரியல்ல, ¾ கி.மீ இருக்கும். நான்சொல்வது தவறு என்றும் எனது ஊரில் இருந்து தாவா சொத்து 6 கி.மீ இருக்கும் என்றால் சரியல்ல.
2. தாராபுரம் பிராத சாலையில் இருந்து வழக்கு சொத்து எந்த திசையில் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் கிழமேல் திசையில் கிழமேல் ரோட்டில் தெற்கு பார்த்து சுமார் 2 கிலோ மீட்டருக்குள் இருக்கும். 2003 ல் அம்மணியம்மாளும் அவரது கணவர் முத்துச்சாமியும் 2 பிரதிவாதியின் கணவரும் 3 மற்றும் 4 பிரதிவாதிகளின் தந்தையான ராமலிங்கத்திற்கு உயில் எழுதி வைத்திருந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராமலிங்கம் அந்த சொத்தில் தான் சுவாதீனத்தில் இருந்து கோழி பண்ணை அமைத்து, தென்னை தோப்பு அமைத்து வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தின் படி வாதிக்கு 1 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருந்தால் தான் அதில் காலியாக இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதி அம்மணியம்மாள் வயோதிகத்தின் காரணமாக நல்ல மனநிலையில் இல்லாத போது 3 மற்றும் 4 பிரதிவாதிகள் அவரை அழைத்து கொண்டு சென்று உயிலை ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.
3. அந்த உயிலை அவ்வாறு ஏமாற்றி ரத்து செய்து விட்டு தங்களது பெயருக்கு

செட்டில் மெண்ட் ஆவணம் மோசடியாக தயார் செய்து கொண்டுவிட்டார்கள் அந்த ஆவணங்கள் நடைமுறைக்கு இதுவரை வரவில்லை என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி 2 முதல் 4 ம் பிரதிவாதிகளுக்கு உறவினர் என்றால் சரியல்ல. நான் 5 ம் பிரதிவாதிக்கு உறவினர் என்றால் இல்லை. நான் இந்த சொத்துக்களின் தரகர் என்ற அடிப்படையில் எனக்கு அனைத்து விவரங்கள் தெரியும் என்றால் இல்லை. பிரதிவாதிகளுக்கு பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்றால் இல்லை. வாதி எங்கு குடியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எனவே நான் வாதியின் ஊருக்கு அருகில் குடியிருப்பதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் உள்ளதை தெரிந்து தான் நான் 5 ம் பிரதிவாதிக்கு கிரயம் பெற்று கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. வாதிக்கு 1 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருந்ததால் தான் அவர் அதில் கம்பி வேலி அமைத்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி அனுபவத்தில் இல்லை, எனவே அவர் பெற்றதாக சொல்லப்படும் கிரைய பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. வாதி பாகப்பிரிவினை பத்திரம் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்த பிறகு அவரது கோரிக்கையை முறியடிக்க வேண்டி பிரதிவாதிகள் தீய எண்ணம் கொண்டு இடை தரகராக நான் முன் நின்று 5 ம் பிரதிவாதி பெயரில் கிரைய பத்திரம் தயாரித்துள்ளோம் அது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல அந்த 2020 கிரைய ஆவணம் எவ்வகையிலும் வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் இருந்து 8 கி.மீ தொலைவில் உள்ளார் அவர் எந்த காலத்திலும் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.